## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No. 107/2020**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சேகர் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : செல்வராஜ் | சமயம் | : |
| கிராமம் | : தாங்கல்கரை | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 60 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை**

**1.** நான் தாங்கல்கரை கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். தாங்கல் கரையில் திருவண்ணாமலை நோக்கி செல்லும் ரோட்டில் சத்தியமங்கலம் போலிசார் விபத்து நடந்த இடத்தில் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அந்த வழியாக நான் சென்றேன். அப்போது நானும் அங்கு நின்றிருந்தேன். அப்போது இங்கு வந்து போனதற்கு சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். கையொப்பம் போட்டு கொடுத்தேன்.

**(2. 01.10.2019 தேதியிட்ட பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை**

எந்த வழக்கிற்காக கையெழுத்து போட்னே் என்றால் விபத்து வழக்கிற்காக வந்து படம் வரைந்ததற்கு கையெழுத்து போட்டேன். என்னிடம் கையெழுத்து வாங்கியது ஆண் போலிசா பெண் போலிசா என்றால் ஆண் போலிசார். என்னிடம் கையெழுத்து வாங்கிய போலிசார் பெயர் பதவி தெரியுமா என்றால் தெரியாது. நான்

கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் தெரியவில்லை. போலிசார் கேட்டதனால் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது

**மறு விசாரணை** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.